★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.கழக இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam:Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 20உ சனி (4—8—56) ★ ★ வெளியூர்: ஆடி 21உ ஞாயிறு (5—8—56) [இதழ் 47

கருத்து சிறந்தது-ஆனால் கவனிப்பவர் யார்?

★

"மனித நாகரிகம் நீடித்து வளர்ச்சியடைய வேண்டுமானால், அணுசக்தி பற்றிய விஞ்ஞான அறிவை, பயங்கர ஆயுதங்கள், போர்கள் ஆகியவற்றில் பயன்படுத்தாமல், மக்களின் நல்வாழ்வுக்கும், அமைதியைப் பாதுகாக்கவும் பயன்படுத்தவேண்டும். நீர்வலிக் குண்டு—அணுகுண்டு இவற்றை வெடிக்க வைத்துச் சோதனை நடத்துவதால், மனிதகுலத்திற்கே நாசம் விளையும்," என்று, அணுகுண்டு பரிசோதனை பற்றி ஆராய்ச்சி நடத்தி, இந்திய விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

பேசுவது சனநாயகம்! செய்வதோ சர்வாதிகாரம்!!

'எதிர்க்கட்சி தேவை என்பார்கள்; தோன்றினால் தொலைத்து விடுவர்'

காங்கிரசின் முரண்பட்டபோக்கு குறித்து விளக்கம்

"....இந்தியா சுதந்திரமடைந்து பத்து ஆண்டுகள் ஆகப் போகிறது; என்றாலும், இந்தக் காலத்தில், தேர்தலில் காங்கிரசை எதிர்க்கக்கூடிய அளவு, எந்த ஒரு எதிர்க்கட்சியும் வளரும் அறிகுறிகூடத் தென்படக் காணோம்.

"தனிநபர் பூஜா மனப்பான்மை காங்கிரசாரிடை வளர்ந்துவிட்டதாக தேஷ்முக் போன்றோர் என்னதான் கூறினாலும், இன்னும் நெடுங்காலத்திற்கு இந்தியாவில் ஒரு கட்சி ஆட்சியேதான் நீடிக்கும்போல் தெரிகிறது.

"காமன்வீல் கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி என்ற இரு கட்சிகள் இருந்தன; அவை சிறிய கட்சிகளாயிருந்த போதிலும், ஸ்தல பிரச்சினைகளுக்காக அவை, காங்கிரசை எதிர்த்து (சென்ற தேர்தலில்) வெற்றி கண்டன.

"ஆனால், பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள், அரசியல்வாதிகளுக்கோ, கட்சிகளுக்கோ பெருமை தரக்கூடியன அல்ல.

"வளர்ந்து பெரிதாவதற்கு மாருக அந்தக் கட்சிகள், தங்களை ஒழித்துக்கொள்ள முடிவு செய்துவிட்டன; எல்லாம்வல்ல காங்கிரசுடன் இணைந்துவிட்டன.

"எதிர்க் கட்சிகள் ஒழிக்கப்படுகின்றன; என்றாலும் நாம், சனநாயகம் செம்மையாகச் செயல்பட எதிர்க் கட்சி ஒன்று உருவாக்கப்பாடுபட வேண்டும் என்று, கூரை மேல் ஏறி நின்று கூவுகிறோம்...."

என்பதாக, 'மெயில்' சென்னை ஆக. 3-ந் தேதி இதழில், என். ஜே. ஆர். என்பார் எழுதியிருக்கிறார்.

★★★★★-★★★★★★★★★★★★-★★

தலைமை நிலையச் செய்தி:

நடிப்பு-இசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

மலேயா சேர்ந்தார்

★

சென்னை, ஆக. 4—

நேற்று காலை 10-40 மணிக்கு சென்னையிலிருந்து ஆகாய விமானம் மூலமாக மலேயாவுக்குப் புறப்பட்டுச் சென்ற நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களும், அவரது குழுவினரும் நேற்றிரவு 8-மணிக்கு சிங்கப்பூர் சென்று சேர்ந்ததாகவும், தி.மு. கழகத் தோழர்களும், மற்றும் ஏராளமான பொதுமக்களும், விமான நிலையத்திற்கு வந்திருந்து நடிப்பு-இசைப்புலவரை வரவேற்றதாகவும், தந்திமூலம் தலைமை நிலையத்திற்குச் செய்தி வந்துள்ளது.

★★★★★★★-★-★★★★★★★★★

பள்ளி மாணவர்களுக்குத் தொழில் பயிற்சி

மைசூர் அரசாங்கத்தின் புதிய திட்டம்

பெங்களூர், ஆக 4—

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சிமெண்டினால் செங்கல்கள் செய்வதற்கும் சாக்குக்கட்டிகள் தயாரிப்பதற்கும் வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்கு மைசூர் அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதாகத் தெரிகிறது.

இத்திட்டம், இங்குள்ள அரசாங்க உயர் நிலைப்பள்ளியொன்றில் புகுத்தப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

படிப்போடு மட்டும் நில்லாது, பள்ளி வேலைகளிலும் தொழில் துறையிலும் மாணவர்கள் பயிற்சி பெறவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி 15 மாணவர்கள் நாள்தோறும் $1\frac{1}{2}$ மணி நேரம் செங்கல் செய்வதில் பயிற்சி பெறுவர்; 6 மாணவர்கள் நாள்தோறும் 45 நிமிடம் சாக்குக் கட்டிகள் செய்வதில் பயிற்சி பெறுவார்.

இருதய ஆராய்ச்சிக்கு 10-இலட்சம் டாலர் உதவி

நியூயார்க்—

இருதய நோய் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள '180 விஞ்ஞானிகளுக்கு அமெரிக்க இருதய சங்கம் 10 இலட்சம் டாலருக்குமேல் மானியம் வழங்கியிருக்கிறதாம்.

நாடு முழுமையிலுமுள்ள விஞ்ஞானிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அம்மானிய உதவிகள், அங்கீகரிக்கப்பட்ட பல்வகைப்பட்ட திட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சிக்கு— ஆராய்ச்சிக் கருவிகள், பொருள்கள், தொழில் நுட்ப உதவிகள் ஆகியவற்றின் செலவுகளுக்கு ஈடு செய்ய உதவும்.

குந்தா நீர்விசை மின்சாரத் திட்டம்

பிரதம என்சினியர் மதிப்பீடு: சர்க்கார் ஏற்றனர்

சென்னை, ஆக. 2—

குந்தா நீர்விசை மின்சாரத் திட்ட முதல்—இரண்டாவது கட்ட வேலைகளுக்கென பிரதம எஞ்சினியர் சமர்ப்பித்த மதிப்பீட்டை சர்க்கார் அங்கீகாரம் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

துவக்கத்தில் ரூ 20 கோடியும், திட்டம் துவக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ரூ. 35 44 கோடியும் செலவாகுமென்பதே அவருடைய மதிப்பீடு.

கல்வியின் தரம் குறைகிறதாம்!

தடுக்க டில்லி நடவடிக்கை எடுத்து வருகிறதாம்

புதுடில்லி, ஆக. 4—

"நாட்டில் நாளுக்கு நாள் கல்வியின் தரம் சில வகைகளில் குறைந்துகொண்டே வருகிறது; இன்னும் அது அதிகமாகத் தரம் குறைந்து போகாமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது,"

என்று, இந்தியக் கல்வித் துறைத் துணை அமைச்சர் மக்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

"அரசாங்க அலுவல்களுக்குத் தேர்ந்தெடுக்கும் குழுவினர் தற்கால மாணவர்களின் கல்வித்தரம் சில சில நிலைகளில் குறைந்து போயிருப்பதைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். மாகாண அரசாங்கங்கள், மத்திய அரசாங்கம் ஆகியவற்றிற்குத் தேர்ச்சி நடத்தும் குழுவினர் இருசாராருமே கொடுத்த அறிவிப்பின்பேரில் கல்வித் தரத்தை உயர்த்த அநேக நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன," என்றும் அவர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள்

திரும்பப்பெறுமாறு சர்க்கார் உத்தரவு

சாக்நிகார், ஆக. 4—

கடந்த ஜுன் 17-ந் தேதியன்று ஓசியார்பூரில் நடைபெற்ற சம்பவங்களையொட்டிக் கைது செய்யப்பட்டவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு சர்க்கார் உத்திரவு பிறப்பித்துள்ளனர்.

இதையொட்டி ஓசியார்பூர் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அவசியமான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

விசைத் தறித் திணிப்பு

சர்க்கார் முயற்சிக்குக் கண்டனம் வலுக்கிறது

கைத்தறி போர்டு உறுப்பினர் வாசவதா எச்சரிக்கை

சென்னை, ஆக. 2—

"இந்தியாவில் சுமார் 28 இலட்சம் கைத்தறிகள் உள்ளன; இந்தத் தறிகள் அனைத்திற்கும் நியாயமான விலையில் நூல் தரப்படுமானால் அதிகபட்சத் துணித் தேவையை இந்தத் தறிகளே பூர்த்தி செய்ய முடியும்.

"நெசவாளர்கள் இப்போது நாள் ஒன்றுக்கு ஆறு கெசம் நெய்வதை விடுத்து எட்டு கெசம் நெய்யுமாறு கோரப்படலாம்.

"இதைவிடுத்து, கைத்தறிகளுக்குப் பதிலாக விசைத்தறிகளைப் புகுத்துவது நெசவாளரை வேலையில்லாத் திண்டாட்டத்தில் அழுத்துவதாகும்.

"விசைத்தறிகளைப் புகுத்தினால், உற்பத்தி மூன்று முதல் நான்கு மடங்கு அதிகரிக்கும். இப்படி உற்பத்தி திடீரென உயர்வதினால், கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதும் பெரும் கஷ்டமாகிவிடக்கூடும். இப்போதே, கூட்டுறவு இயக்கத்தின் அணைப்பில் இல்லாத நெசவாளர்கள் தங்கள் உற்பத்திக்கு 'மார்க்கெட்' தேடுவதில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். இந்த நிலையில் 35,000 விசைத் தறிகளைப் புகுத்துவதினால், ஏற்கனவே அவதியுறும் நெசவாளர்கள் அழிந்துபடுவர். எனவே, இந்த விசைத்தறி புகுத்தும் விவகாரத்தை, முழுவதும் ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து நோக்குவதைவிட, மனிதாபிமானத்துடன் நோக்க வேண்டும்,"

என்று, அகில இந்திய கைத்தறி போர்டு உறுப்பினரும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவருமான எஸ். ஆர். வாசவதா இங்கு பத்திரிகையாளரிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

'கமிஷனு'ம் 'போர்டு'ம்

மத்திய மந்திரி விளக்கம்

"பல நிறப்பட்ட தொழில் துறைகளிலுள்ள ஊழியர்களின் ஊதியப் பிரச்சினையில் சிறந்த பரிகாரம் தேடுவதற்கு, 'ஊதியக் கமிஷனின்' விரிவான விசாரணைகளைவிட, மத்திய சர்க்காரால் விரைவில் நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் 'ஊதியப் போர்டு'கள் அத்தொழிலாளர்களுக்குத் தேவையான சிறந்த-விரைவான பரிகாரங்களைத் தேடித் தரும்,"

என்று, மாநிலங்கள் சபையில், தொழிலாளர் இலாகா துணை அமைச்சர் அபித் அலி தெரிவித்திருக்கிறார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிதாக 100 கலங்கரை விளக்கங்களை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

ஜமீன் ஒழிப்பு நடைபெறும் விதம்!

ரூ. 325 கோடி நஷ்ட ஈடு தரப்படுகிறது?

ரிசர்வ் பாங்கிதரும் தகவல்

பம்பாய், ஆக. 2—

'ஜமீன்களை ஒழித்துவிட்டோம்' என்ற பெருமையைப் பெறுவதற்காகக், காங்கிரசார், ரூ. 325 கோடி செலவிட முடிவு செய்திருக்கின்றனராம்.

ஒழிக்கப்படுகிற ஜமீன்களுக்கு, நஷ்டஈடு வழங்குவதற்காகத்தான் இத்தனை பெரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவலை 'ரிசர்வ் பாங்க்' வெளியிட்டிருக்கிறது.

இந்தப் பெரும் தொகைக்கு, முன்னுள் ஜமீன்தாரர்களுக்கு பத்திரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், இவை பல தவணைகளில் தரப்படுகின்றன என்றும் பாங்கியின் அறிக்கை கூறுகிறது.

ஜமீன் ஒழிப்பு நஷ்டஈட்டுத் தொகையை, மாநிலங்களே தங்கள் வருவாயிலிருந்து செலுத்தும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

நம் நாடு

சென்னை 4-8-'56 சனி

ஆச்சாரியார் 'அரும்பணி!'

'சுதந்திரம் கிடைத்துவிட்ட பிறகு நல்லாட்சிக்குள்ள முக்கியத்துவம் முடிவடைந்துவிடவில்லை. நல்லாட்சியை அடைவதுதான் எல்லா ஆட்சிக்கும் உள்ள விழுமிய நோக்கமாகும். ஒரு குடியரசில் நல்லாட்சியின் தேவையாக இருப்பவை, நல்ல சட்டசபையினர்—அடியிலிருந்து நுனிவரை பணியாற்றும் அரசாங்க ஊழியர்கள்—நல்ல நீதிபதிகளுமாகும். ஆட்சிபுரிய நல்ல சட்டசபையினர், நீதிபதிகள், அரசாங்க ஊழியர்கள் முதலியவர்களை நாம் பெற்றிருந்தால் அல்லாது நம்மால் நல்லாட்சியைப் பெறமுடியாது."

—இவ்வாறு, தாம் காண விரும்பும் 'நல்லாட்சி'க்கு ஆச்சாரியார் இலக்கணம் வகுத்துக் காட்டுகிறார்.

இத்தகு இலக்கணம் பொருந்திய 'நல்லாட்சி' ஏற்பாடு நமக்கும் உடன்பாடானதே என நேற்று குறிப்பிட்டிருக்கிறோம். அத்துடன், நமது கழகம் மேற்கொண்டு வரும் அரசியல் முயற்சியில் பெரும் பகுதி, அத்தகு 'நல்லாட்சி'யை பலம் பொருந்திய கடைக்காலின்மீது நிர்மாணிப்பதற்கே எனவும் வற்புறுத்திக் கூறியிருக்கிறோம்.

மக்களாட்சி முறையில் அத்தகு 'நல்லாட்சி' மலர்ந்து மணம் வீச வேண்டும் என்ற நமது உள்ளக்கிடக்கையையும் ஒளிவுமறைவின்றி எடுத்துக் காட்டி இருக்கிறோம்.

அத்தகு 'நல்லாட்சி' மக்கள் தொகையில் பெரும் பகுதியினரால் உருவாக்கப்பட வேண்டி இருப்பதினால், மக்கள் சமுதாயத்திடை புதிய விழிப்பு—புதிய மனவளம்—புத்தம் புதிய கண்ணோட்டம் கண்டிப்பாக அரும்ப வேண்டியது முக்கியமான முதற்தேவையாகும். அந்த முதற்தேவை நமது சமுதாயத்திடை இடம்பெற்றால் அல்லாது, நல்லாட்சி அமைக்க மட்டுமே அல்லாது எந்த ஒரு ஏற்பாட்டினையும் சிறந்த முறையில் நிர்மாணித்து செயல்படுத்து வது என்பது இன்றுள்ள நமது சமுதாயத்தால் இயலவே இயலாது.

அப்புதிய விழிப்புணர்ச்சி, அப்புத்தம் புதிய கண்ணோட்டம், நமது சமுதாயத்திற்குத் தானாக ஏற்பட்டுவிடாது. நாம்தான் முயன்று அவ்விழுமிய புதிய கண்ணோட்டத்தை நமது சமுதாயத்திடை பரப்ப வேண்டும்.

நமது சமுதாயத்தைப் புதிய கண்ணோட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கு முன், நாம் புதிய கண்ணோட்டம் பெற்றாகவேண்டியது இன்றியமையாதத் தேவையாகும்.

புதிய மனப்போக்கை நாம் பெறத் தவறினாலும், வெறுத்து ஒதுக்கினாலும், அத்தகைய மாறு மனம் கொண்ட நம்மாலும், நமது போதனையாலும், சமுதாயத்தில் புதிய மனப்போக்கு — மறுமலர்ச்சி ஏற்படுத்துவது என்பது முடியாது. அம்முயற்சி கண்ணிலிக்குக் கண்ணிலி வழிகாட்டின கேலிக்கூத்தாகவே முடிவுறும்.

எனவே, புதிய நோக்கிற்கு முதல் முதலாக நாம் நம்மைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டியது கட்டாயத்திலும் கட்டாயமாகிறது என்பது விளக்கமாகிறது.

இந்நிலையில் தேவைப்படும் புதிய கண்ணோட்டம் எது என்பதை துருவித்துருவி ஆராய்ந்து நாம் தெளிவாகக் கண்டறிந்தாக வேண்டும். அத்தகைய நுண்ணிய ஆராய்ச்சியின் மூலம் கண்ட உண்மையைத் தயக்கம் துளியும் காட்டாது, மிகத் துணிவுடன் செயலாற்ற நாம் முன்வர வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் இரண்டறக் கலந்திருக்கும் குறைபாடு எவை, அது எதை அடிப்படையாகக் கொண்டு பிறந்து, சமுதாய முற்போக்கைக் குலைத்துவருகிறது என்பதை ஆராய்ந்தறிய முனைய வேண்டும்.

எந்த சக்தி அல்லது ஆற்றல் குறைந்து போனதால் அல்லது பட்டுப்போனதால், சமுதாயம் வளர்ச்சி குன்றி, முன்னேற்றப் பாதையில் செல்லும் ஆர்வமின்றி, தேக்கமுற்றுக்கிடக்கிறது என்றப் பெரும் உண்மையைக் கண்டுபிடிக்க முயல வேண்டும்.

இவ்வாராய்ச்சி முயற்சியால் வெளிப்படும் உண்மை, நமது முற்கால நம்பிக்கைக்கு உலைவைப்பதாக இருந்தாலும், முன்னர் நம்மால் மதிக்கப்பட்டு வந்ததைத் தவறுடையது என உணர்த்துவதாக இருந்தாலும், அவ்வுண்மையைப் பின்பற்றி, நமது சமுதாயத்திற்குப் புதிய விழிப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட வேண்டும்.

இவ்வாராய்ச்சியில் நாம் மட்டுமே முதல் முதலாக ஈடுபடுகிறோம் என்பதில்லை. நமக்கு வழிகாட்டியாக முன்மாதிரியாக எவரும் செயல்பட்டிருக்கக் காணோமே என நாம் அஞ்சத் தேவை இல்லை.

மேல்நாட்டு சமுதாய வரலாறு, இவ்வாராய்ச்சிக்குரிய சிறந்த பயிற்சிக் கூடமாக இருந்து வருகிறது. அப்பயிற்சிக்கூடத்தில் நாம் சிறிதுநேரம் கருத்துச் செலுத்திப் பயின்றாலே போதும்.

இவ்வுயர்ந்த ஆராய்ச்சிக்கு ஆச்சாரியார் தயாராக இல்லை. அவ்வாறு அவர் தயாராக இல்லாதது, சாதாரண அலட்சியத்தினால் அல்ல; வேண்டுமென்றே ஆச்சாரியார் அலட்சியம் காட்டுகிறார்—இல்லை பிடிவாதம் பேசுகிறார்.

அவ்வாராய்ச்சியில் ஆச்சாரியார் ஈடுபடாதவருமல்ல; சமுதாயம், புதிய மனப்போக்கைப் பெறாது தேங்கிக் கிடப்பதற்குரிய மூல காரணத்தை, அவர் அறியாதவருமல்ல; அறிந்தவர்தான்! இருந்தாலும் புதிய கண்ணோட்டத்தை சமுதாயம் பெறுவதை, அவர் விரும்பவில்லை. விரும்பாததுடன் மட்டுமல்லாது; சமுதாயத்திற்குப் புதிய விழிப்பூட்ட பாடுபடுகிற நம்போன்றவர்களையும் தூற்றும் பணியினைத் தீவிரமாக மேற்கொண்டும் இருக்கிறார். ஏன்?

காப்பி உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

1,40,000 ஏகராவில் தீவிரசாகுபடி முறைகள் கையாளப்படும்

புதுடில்லி, ஆக 2—

இந்திய சர்க்கார், நாட்டின் காப்பி உற்பத்தியை ஆண்டிற்கு 9000 டன் வீதம் அதிகப்படுத்துவதற்கான ஐந்தாண்டுத் திட்டமொன்றை அங்கீகரித்திருக்கிறார்கள். இத்திட்டத்துக்கு ரூ 3,95,00,000 பிடிக்கும்; இப்போது காப்பி உற்பத்தி ஆண்டிற்கு 26000 டன் ஆக இருக்கிறது.

1,40,000 ஏகராவில் தீவிர சாகுபடி முறைகள் கையாளப்படும். காப்பி சாகுபடியாளர்களுக்கு இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 1,35,00,000 கடன் கொடுக்கப்படும்.

தென்னாட்டுச் செல்வம்

தேனிரும்பு உற்பத்திக்கு ஆக்கந் தருகிறதாம்

"நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியும், சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருளும் தேனிரும்பு தயாரிப்பதற்கு ஏற்றவையாக இருக்கின்றன,"

என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கனரகத் தொழில் இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

நிர்மானித்துவிட்டனராம்!

சென்னை சர்க்கார் ரூ 12 கோடி பொதுக் கடன் எழுப்ப இறுதியாகத் தீர்மானித்துவிட்டதாக முதன் மந்திரி காமராசர் கூறியுள்ளார்.

'கடனின் தவணைக் காலம் 12 வருடமாக இருக்கும்; ரூ. 100 கடன் பத்திரம் ரூ 99-12-0க்கு வழங்கப்படும்; அதற்கு 4 சதவிகித வட்டி வழங்கப்படும்; அதுபற்றிய அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகும்' என்றும் அவர் தெரிவித்தார்.

கடன் தருவது குறைந்து கொண்டே வருகிறதாம்!

செல்மீது கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்துமாறு மே 17-ந் தேதி எல்லா 'ஷெட்யூல்டு' பாங்கிகளுக்கும் ரிசர்வ் பாங்கி உத்தரவிட்ட பின்னர், அவ்விதம் கடன் கொடுப்பது குறைந்துகொண்டே வந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

போலீசாருக்கு வீடுகள் கட்டித் தரப்படும்?

மத்திய சர்க்கார் கடன் தரக்கூடும்

புதுடில்லி, ஆக. 2—

போலீஸ் கான்ஸ்டபிள்கள், தலைமைக் கான்ஸ்டபிள்கள், மற்றும் பல கீழ்த்தர உத்தியோகஸ்தர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கென மாநில சர்க்கார்களுக்கு ரூ. 3 கோடி கடன் தருவதென முடிவு செய்திருப்பதாக, மாநிலங்கள் சபையில் அமைச்சர் பி. எஸ். தத்தார் கூறியிருக்கிறார்.

சம அளவு மதிப்பீடுகளுடன் வீடுகள் கட்டவேண்டுமென்ற நிபந்தனையுடனேயே மத்திய சர்க்கார் இக்கடனைக் கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்புக்குச் செலவிட்ட தொகை

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், எல்லா மாநிலங்களுக்குமாகச் சேர்த்துத் தீண்டாமை ஒழிப்புக்காக மொத்தம் ரூ 1,38,34,960 தரப்பட்டிருக்கிறது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

'தொழிலாளர் வேலை இழக்க நேரிடும்'

தானே இயங்கும் தறிகளுக்கு துணி ஆலை ஊழியர்கள் எதிர்ப்பு

ஆமதாபாத், ஆக. 3—

சாதாரணத் தறிகளுக்குப் பதிலாகத் தானே இயங்கும் தறிகளை துணி ஆலைகளில் அமைப்பதை ஆமதாபாத் துணி ஆலைத் தொழிலாளர் சங்கம் பூரா்வாக எதிர்ப்பதாகவும், இதனால் பல தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரம்மபுத்திரா நதியின் கீழ் குகைப் பாதை அமையும்?

தொழில் நுட்ப ரீதியில் பரிசீலனை செய்யப்படுகிறதாம்

பிரம்மபுத்திரா நதிக்குக் குறுக்கே பாதைப் பாலமொன்றையோ, நதிப் படுகைக்குக் கீழ் குகைப் பாதையொன்றையோ அமைப்பது பற்றி தொழில் நுட்ப ரீதியில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் பூர்வாங்க ஆராய்ச்சி வேலைகள் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மத்திய போக்குவரத்து மந்திரி, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

60 இலட்சம் டாலர் செலவில்!

சித்தரஞ்சனில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை உருவாகும்

ஆண்டொன்றுக்கு 7,000 டன் உற்பத்தி செய்யக்கூடிய உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றை 60 இலட்சம் 'டாலர்'கள் செலவில் சித்தரஞ்சனில் நிர்மாணிப்பதெனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்தகவலை மத்திய துணை போக்குவரத்து அமைச்சர் ஒ. வி. அழகேசன் மக்கள் சபையில் வெளியிட்டிருக்கிறார்.

இந்தத் தொழிற்சாலையின் வருடாந்திர உருக்கு வார்ப்பட உற்பத்தியை 10,000 டன் வரையிலும் அதிகரிக்கச் செய்ய முடியும் என்றும், அவர் தெரிவித்திருக்கிறார்.

மேலும், இந்தத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதில், தொழில் நுட்ப உறவு கழகம் 25 மில்லியனிலிருந்து 3 மில்லியன் டாலர் வரை இந்திய சர்க்காருக்கு உதவி செய்யும் என்றும், இந்தத் தொகை அந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கத் தேவையான இடம், இயந்திரச் சாதனங்கள் போன்றவைகளை வாங்குவதற்கு பயன்படுத்தப்படும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

தறிகளைப் பதிவு செய்வதன் நோக்கம்!

புள்ளி விவரங்களைத் தயாரிப்பதற்குத்தானாம்!

புதுடில்லி, ஆக. 3—

"கடந்த மே மாதம் 8-ந் தேதியன்று, மத்திய சர்க்கார், கைத்தறிகளையெல்லாம் பதிவு செய்தாக வேண்டும் என்று கட்டாய உத்திரவு ஒன்றைப் பிறப்பித்ததன் நோக்கம், நாடு முழுமையிலுமுள்ள கைத்தறிகளின் அவசியமான புள்ளி விவரங்களைத் தயாரிக்க வேண்டுமென்பதற்காகத்தான்" என்று, மத்திய வர்த்தக தொழில் இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

பம்பாயிலுள்ள நூல் நூற்புக் கமிஷனரிடமோ, அல்லது அவருடைய உத்திரவைப் பெற்ற பிற அதிகாரிகளிடமோ கைத்தறிகளின் சொந்தக்காரர்கள் தங்கள் தங்கள் கைத்தறிகளைக் கண்டிப்பாகப் பதிவு செய்தாக வேண்டும் என்று உத்திரவு ஒன்றை மத்திய சர்க்கார் பிறப்பித்திருந்தனர்.

தற்போது, பதிவு செய்யும் வேலைகளில் முன்னேற்றம் கண்டிருந்தாலும்கூட, அதை எதிர்த்து கைத்தறியாளர்களுள் ஒரு பிரிவினர் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துவருகின்றனர் என்று இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்டக்காலத்தில் தறிகள், நூல், புதிய தொழில் நுணுக்க சாதன உதவிகள், அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆகக்கூடிய செலவுகள் ஆகியவை பற்றிய விவரம் சேகரிக்கவே இந்த ஏற்பாடு என்று கூறப்பட்டிருக்கிறது.

'தியாகி'களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை

சென்னை மந்திரி சபையின் சாதகமான முடிவு

சென்னை, ஆக. 2—

சென்னை மாநிலத்தில், 'அரசியல் தியாகி'களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகைகள் வழங்குவது பற்றி சென்னை சர்க்கார் விரைவில் பரிசீலிக்கும் என்றும், அதுபற்றி சென்னை மந்திரி சபை ஒரு சாதகமான முடிவு செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம். 'தியாகி'களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்புவரைகூட அச்சலுகை நீடிக்கப்படலாம் என்றும் நம்பப்படுகிறதாம்.

அல்ஜீரிய மக்களின் உரிமைக் கிளர்ச்சியின் விளைவு

பிரெஞ்சு நாட்டின் பொருளாதாரம் நிலைகுலைந்து விட்டது?

சீரழிவை நேர்செய்ய பிரதமர் கோரிக்கை

பாரிஸ், ஆக. 2—

அல்ஜீரியாவில் ஏற்பட்டக் கொந்தளிப்புகளின் விளைவாக அங்கு நிலவிவரும் பொருளாதார நிலை குலைவைத் தவிர்க்க பிரெஞ்சு சர்க்கார் பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்வதாகத் தெரிகிறது.

அல்ஜீரியாவில் பொருட்களின் விலை உயர்வையும், ஊதியக் குறைவையும் நிவர்த்தி செய்யவேண்டும் என்று பிரெஞ்சுப் பிரதமர் மாலட் தேசிய சட்டசபையில் பேசியிருக்கிறார்.

"அல்ஜீரியக் கொந்தளிப்புகளின் விளைவு ஒரு பெரிய தேசியப் பிரச்சினையாக மாறிவிட்டிருக்கின்றது; அதனால் நமது நாட்டுக்கு ஏற்பட்டத் தொல்லைகள் கணக்கிலடங்காதன; இந்த ஆண்டில் மட்டும், அல்ஜீரியாவைப் பொறுத்த வரையில் 3,00,000 மில்லியன் 'பிராங்கு'கள் அதிகப்படியாகச் செலவிட வேண்டியிருக்கும்; அங்கு சமாதானம் நிலவ ஆரம்பித்து விட்டதும், அல்ஜீரியா, தன்னுடைய பொருளாதார நிலையைச் சீர்செய்து கொள்ளவும், தன்னுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீண்டும் உயர்த்திக் கொள்ளவும் பலவகையிலும் உதவியை எதிர்பார்த்திருக்க வேண்டியிருக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இறுதியில் அல்ஜீரிய பொருளாதார உதவித் திட்ட வரவு செலவுக் கோரிக்கைக்கு ஆதரவாக 300-வோட்டுகளும், எதிராக 136 வோட்டுகளும் பெற்று, சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

நல்ல ரக இரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு பெங்களூரில் இயந்திரச் சாதனங்களை நிர்மாணிக்க ஒரு மேற்கு ஜெர்மன் கம்பெனியுடன் பெங்களூர், இந்துஸ்தான் விமான தொழிற்சாலை பேச்சு நடத்தி வருகிறது.

'எகிப்தைவிட்டு உடனே வெளியேறிவிடுக'

எகிப்திலுள்ள பிரிட்டிஷ் மக்களுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

லண்டன், ஆக 2—

எகிப்திலுள்ள பிரிட்டிஷ் மக்கள் அனைவரும் உடனே அந்நாட்டைவிட்டு வெளியேறிவிடும்படியாக பிரிட்டன் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

"'நிவர்த்திக்க முடியாத' காரணங்களைத் தவிர, மற்ற எந்தக் காரணத்தைக்கொண்டும் இப்போது பிரிட்டனிலிருந்து எகிப்து செல்லவேண்டியவர்கள் எவரும் போகவேண்டாம்" என்று பிரிட்டன் வெளிநாட்டுக் காரியாலயம் கேட்டுக் கொண்டுள்ளது.

"மத்திய கிழக்கு பகுதிகளுக்கு பிரிட்டிஷ் இராணுவத் தளங்கள், அனுப்பப்பட்டிருக்கின்றன,"

என்று, மக்கள் சபையில் பிரதமர் அந்தோனி ஈடனும், வெளிநாட்டு இலாகா செயலாளர் செல்வின் லாயிடும் தெரிவித்திருக்கின்றனர்.

எகிப்திலுள்ள பிரிட்டிஷ் தூதுவர்கள் அனைவரும், அங்குள்ள 'காமன் வெல்த்' குடி மக்கள் உட்பட்ட எல்லா பிரிட்டிஷ் குடி மக்களையும் வெளியேற எச்சரிக்கை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களாம்.

எகிப்தில் 17,000 பிரிட்டிஷ் குடி மக்கள் தற்போது வாழ்ந்து வருகின்றதாகக் கருதப்படுகிறது.

கிழக்கத்திய மத்தியதரைக் கடற்பகுதிகளில் அவசர உதவிகளுக்காக பிரிட்டிஷ் 'ரிசர்வ்' இராணுவத்திலுள்ள 'விசேட துருப்புக்களையெல்லாம் அழைக்கும் பிரகடனம் ஒன்றில் பிரிட்டிஷ் இராணியார் கையொப்பமிட்டுவிட்டாராம்.

★

சூயஸ் கால்வாய் பிரச்சினை எதிரொலி

24 நாடுகள் மாநாடு கூட்ட மூன்று வல்லரசுகள் ஏற்பாடு

எகிப்து, இந்தியா, ரஷ்யா கலந்துகொள்ளும்?

லண்டன், ஆக. 3—

சூயஸ் கால்வாயை எகிப்து சர்க்கார் தேசியமயமாக்கியது குறித்து எழும்பியுள்ள விவகாரங்களை ஆராய்ந்தறிந்து முடிவு செய்வதற்கென, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய 3 வல்லரசுகளும்கூடி, ரஷ்யா, எகிப்து, இந்தியா ஆகிய நாடுகள் உள்ளிட்ட 24 நாடுகளடங்கிய மாநாடு ஒன்றை இத்திங்கள் 16-ந் தேதியன்று லண்டனில் நடத்துவதென முடிவு செய்துள்ளனவாம்.

கடந்த வாரத்தில் சூயஸ் கால்வாய் போக்கு-வரத்தை எகிப்து சர்க்கார் தேசியமயமாக்கின செய்கையானது 'நியாயமற்றதும், ஒருதலைப்பட்சமான செய்கையும் ஆகும்' என்று, மேற்கத்திய மூவல்லரசுகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றன.

எகிப்து, பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஸ்பெயின், துருக்கி, பிரிட்டன், ரஷ்யா, ஆஸ்திரேலியா, இலங்கை, டென்மார்க், எத்தியோப்பியா, மேற்கு ஜெர்மனி கிரீஸ், இந்தியா, இந்தோனேசியா, பெர்சியா, ஜப்பான், நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், போர்ச்சுகல், சுவீடன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.

அந்த மாநாட்டில் கலந்துகொள்ள விரும்பம் தெரிவிக்கும் பிற நாடுகளும்கூட, கலந்துகொள்ள அனுமதிக்கப்படுமாம்.

★

பொருளாதாரத் தொடர்பை துண்டித்துக் கொண்டது!

சிங்கப்பூரைப் பின்பற்றி மலாயா சர்க்கார் நடவடிக்கை

சிங்கப்பூர், ஆக 2—

சிங்கப்பூரைப் பின்பற்றி மலாயா சர்க்கார், மலாயாவிற்கும்—எகிப்துக்குமிடையே உள்ள பொருளாதாரத் தொடர்புகளைத் துண்டித்துக்கொண்டுள்ளதெனத் தெரிகிறது.

மலாயா சர்க்காரும் சிங்கப்பூரும், வெளிநாட்டு வர்த்தகத் துறைகளைப் பொறுத்த விஷயங்களை எப்போதும் கலந்தாலோசித்து, இரண்டு நாடுகளும் கூட்டாகவே செயல்பட்டு வந்திருக்கின்றன.

தலைமைக் காரியாலயங்களிலிருந்து தங்களுக்கு தாக்கீது பிறப்பிக்கப்படும்வரையில், சிங்கப்பூர் கப்பல் கம்பெனியார் சூயஸ் கால்வாய் வழியாகவே தங்கள் சாமான் போக்கு-வரத்தைத் தொடர்ந்து நடத்துவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தெரிந்ததுதானே!

புதுடில்லி, ஆக. 3—

"ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகியவிடங்களில் அமைக்கப்படவிருக்கும்உருக்கு உற்பத்திசாலைகள் நீங்கலாக, வேறெந்தவிடத்திலும், உருக்கு உற்பத்தி சாலையை அமைக்கும் யோசனை எதுவும் இந்திய சர்க்காரிடம் இல்லை,"

என்று, மாநிலங்கள் சபையில், இரும்பு—உருக்கு உற்பத்தி மந்திரி கூறியுள்ளார்.

"ஆயினும், பீகாரில் உள்ள பொக்காரோவை, அடுத்த உருக்கு உற்பத்திசாலை அமைக்கப்படுவதற்கான இடமாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

சரியான சந்தர்ப்பம்!

புனா, ஜூலை 31—

பம்பாயை மத்திய சர்க்கார் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவதையும், பஞ்சாபில் வட்டார அமைப்பு முறையையும் கண்டித்து, அகில இந்திய இந்து மகாசபை தனது எதிர்ப்பை வலியுறுத்திக் கூறியிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட பஞ்சாப், மகாராட்டிரா பிரச்சினைகள் இரண்டையும் முன்னிறுத்தி வருகிற பொதுத் தேர்தல்களில் மற்றக் கட்சிகளுடன் கூட்டுசேர்ந்து அ. இ. இந்து மகாசபை போட்டியிடும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் காகிதத் தொழிற்சாலை

திட்டம் எதுவும் வரவில்லை என்கிறார் மத்திய அமைச்சர்

சென்னை மாநிலத்தில் மேட்டூரில் காகிதத் தொழிற்சாலையோ பவானிசாகரில் பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலையோ அமைப்பதற்குத் திட்டம் எதுவும் வரவில்லையென்று மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், கைத்தொழில்—வர்த்தக இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

நஷ்ட ஈடு தருவதற்கு ஆலோசிக்கின்றனராம்!

புதுடில்லி, ஆக. 3—

சேரிகளின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க சில கொள்கைகள் சம்பந்தமாக சட்டம் இயற்றுவதுபற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் வன்னியசிங்கம் அவர்களுக்கு, 28—7—56-ல் சென்னை—மயிலை 'உட்லண்ட்ஸ்' ஓட்டலில் தோழர் எச். டி. இராசா அவர்களால் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் கலந்துகொண்ட பெருமக்கள்.

இடமிருந்துவலம்:—திருமதி சீதாலட்சுமி குமாரசாமி, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எச்.டி. இராசா எம்.பி., வன்னியசிங்கம், ம. போ. சிவஞானம், ப. ஜீவானந்தம், என். வி. நடராசன்.

எந்தப் பகுதியும் இந்தியாவை விட்டுப் போய்விடவில்லையாம்!

அணுயுகத்தில் வாழ்கிறோமாம்: ஆகவே 'முடிவு'களை ஒப்புக்கொள்ள வேண்டுமாம்

பண்டித நேருவின் விசித்திர வாதம்

பூனா, ஆக. 1—

"இங்குள்ள ஒரு சிறு நிலப்பரப்போ அல்லது ஒரு தாலுகாவின்பகுதியோ இந்த மாநிலத்துக்கோ அல்லது அந்த மாநிலத்துக்கோ மாற்றப்பட்டுவிடுவதால் ஒன்றும் கெட்டுவிடவில்லை; அந்த இடமோ அல்லது குறிப்பிட்ட பகுதியோ இந்தியாவை விட்டு வேறெங்கும் போய்விடவில்லை; நாடு முழுவதும் ஒன்றே என்ற முறையில் நாம் வேலை செய்ய வேண்டும்;

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பதில் ஏற்பட்டுள்ள குழப்பங்களினால் உருவான 'அனலை' மறந்துவிட்டு, நாட்டின் பொருளாதாரச் சீரமைப்பில் மக்கள் தம் முயற்சியையும் உழைப்பையும் செலுத்த வேண்டும்.

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட கருத்துக்களையும், முடிவுகளையும், அவைகள் எப்படிப்பட்டவைகளாயிருந்தாலும் அதைக் கவனிக்காமல், அவற்றை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"நாம் இன்று, புதிய அணுயுகத்தில் வாழ்கிறோம் நமமிடையே உள்ள பழைய குரோதங்களையும், பிரிவினை மனப்பான்மைகளையும் மறந்து, 'நவீன' சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்க ஒன்றுபட வேண்டும்,"

என்று பிரதமர் நேரு பூனாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மாநிலத் திருத்த அமைப்பினால் ஏற்பட்ட பிரச்சினைகள் அரசியல், பொருளாதாரச் சம்பந்தப்பட்டவை அல்ல; மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கைகள் சில எனக்கேகூடப் பிடிக்கவில்லைதான்; என்றாலும், பெரும்பான்மையினர் ஒப்புக்கொள்வதை ஆதரித்தே ஆகவேண்டும் என்ற நல்ல கொள்கையால்தான் நானும் அவற்றை ஒத்துக்கொண்டிருக்கிறேன்.

"மாநில புனரமைப்புக் குழு அறிக்கைகளின் விளைவாக அதிகமான 'அரசியல் அனல்' உருவாக்கப்பட்டாலும்கூட, அவற்றின் ஏறத்தாழ 90 சதவிகிதத் தகராறுகள் தீர்த்துவைக்கப்பட்டுவிட்டன.

"மிக முக்கியமான பிரச்சினைகளுள் ஒன்றுதான் பம்பாய் நகரத்தைப் பற்றியதாகும். மகாராட்டிர மக்கள், பம்பாய் நகர் சம்யுக்த மராட்டியத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று கோரினதைமறுப்பதற்கில்லைதான்; அதுபோலவேதான், பம்பாய் நகரின் மொத்த மக்கள்தொகையில் 40 சதவிகிதத்தவர் மராட்டியரே என்பதையும், நகரின் பெரும்பான்மை வகுப்பினர் அவர்கள்தான் என்பதையும் நான் அறிவேன்.

"என்றாலும் மகாராட்டிர மாநிலம் தனி மொழி மாநிலமாக இருக்கவேண்டுமென அவர்கள் கோருவது குறித்து வருந்துகிறேன்; என்னைப் பொறுத்தவரையில், 'பம்பாய் மாநிலம் ஒரு பெரிய இருமொழி மாநிலமாக அமையவேண்டுமென்று மாநில புனரமைப்புக் குழு முடிவு செய்ததானது பம்பாய்க்கு நன்மை பயக்கும் என்றே நான் உணருகிறேன். அந்தச் சிபாரிசை உண்மையிலேயே நான் பெரிதும் விரும்புகிறேன்; ஆனால் மகாராட்டிரத் தலைவர்கள் அதை எதிர்த்து மறுப்பது குறித்து எனக்கு வருத்தமே!

"ஒரு இறுதியான முடிவுகாண வேண்டுமென்ற நோக்கத்துடன், பம்பாய் மாநிலத்தைத் திருத்தி அமைப்பது குறித்த பிரச்சினை திரும்பத் திரும்ப விவாதிக்கப்பட்டது. எல்லா குசராத்தி மொழிப் பகுதிகளும், மராத்தி மொழிப் பகுதிகளும், விதர்ப்பமும் உள்ளடங்கிய ஒரு மாநிலமாக உருவாக வேண்டுமென்றே நாங்கள்கூட விரும்பினோம். ஆனால் அந்தக் குறிக்கோள், மற்றும் சிலருக்கு ஒத்துவராத காரணத்தால் அது தோற்கடிக்கப்பட்டது.

"ஏனென்றால், விதர்ப்பம், மகாராட்டிரத்துடன் சேர விருப்பமில்லாமல், தனியாக ஒரு மாநிலம் வேண்டுமெனக் கோரியது; என்றாலும் நானும், எனது மற்றத் தோழர்களும், மகாராட்டிர மாநிலத்துடன் சேர்ந்து கொள்ளுமாறு விதர்ப்ப மக்களைக் கேட்டுக் கொண்டோம்; அதன் பிறகுதான் மகாராட்டிரம்—குசராத் தனி மாநிலங்கள் உருவாக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

"இப்போது மீண்டும் பம்பாய் பிரச்சினை முன்னிற்கிறது. துரதிருஷ்டவசமாக இப்பிரச்சினைக்கு ஆர்ப்பாட்டங்கள் மூலம் பரிகாரம் தேட முயற்சிக்கப்பட்டது; நாட்டின் நலனுக்காக ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டிய இரு சாராரிடையிலேயே மோதுதல் ஏற்பட்டுவிட்டது இந்த மோதுதல் அந்த இரு சாராருடைய முழு முயற்சியும் நாட்டுக்கு அதிகமாகத் தேவைப்பட்ட நேரத்தில் ஏற்பட்டுவிட்டது.

"**பம்பாய் நகரமானது, கடந்த 150 ஆண்டுகளாக, பல திறப்பட்ட வகுப்பு மக்களின் பல மொழி பேசும் மக்களின் ஒருமித்த முயற்சியால் கட்டப்பட்ட ஒன்றாகும்; ஆனால் இன்றோ, மொழி வெறிக்கு அடிமைப்பட்டு விட்டதின் விளைவாக, அந்த முயற்சிகளின் உருபலனை அழித்து நாசமாக்குகிறோம்.**

"ஐந்தாண்டுக் காலம் ஒன்றும் அதிக நீண்ட காலமல்ல; பம்பாய் நகரமோ, அல்லது இந்தியாவோ, இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் எங்கேனும் ஆகாயத்தில் சென்று மறைந்துவிடாது.

"பம்பாய் நகரின் எதிர்காலம் குறித்து முடிவுசெய்ய அந்த 5 ஆண்டுகாலம் அதிக வரையறையல்ல; ஆனால் அதற்குள் மக்களிடையே ஏற்பட்டுள்ள 'காயங்கள்' ஆறவேண்டுவதுதான் முக்கியம்.

"நமக்குள் ஒருவருக்கொருவர் 'குரோத' உணர்ச்சி கொள்ளாமலும், நம்முடைய இருதயங்களையும், எண்ணத்தையும் மூடிவிடாமலும், எந்த விவகாரத்தையும் 'திறந்த மனப்பான்மை'யுடன் ஆராய முனைவோம்.

"ஒருவருக்கொருவர் 'வெள்ளை உள்ளத்தினராக' இருப்போம்; நம்முடைய பிரச்சினைகளையெல்லாம் வெள்ளை உள்ளத்துடன், அமைதியாகவும் சமாதான முறைகளை மேற்கொண்டும் தீர்த்துக் கொள்வோம்."

இனி தயாரிக்கக் கூடாது!

புதிய 2-வது வகுப்புப் பெட்டிகளைத் தயாரிக்கக் கூடாதென இரயில்வே போர்டு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

டில்லி சர்க்கார் ஊழியர்களுக்கு மாநில சர்க்கார் சலுகைகள்

தருவது சாத்தியமில்லையென சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் அறிவிப்பு

சென்னை, ஆக. 4—

"சென்னை சர்க்காரில் மாதம் ரூ. 300-க்குக் குறைவாக சம்பளம் வாங்குகின்ற ஊழியர்களுக்குத் தரப்படும் கல்வி, மற்றும் மருத்துவச் சலுகைகள், இம்மாநிலத்திலுள்ள மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் தரப்படும் என்று உறுதிகூற நான் விரும்பவில்லை"

என்று, சென்னை சர்க்கார் நிதி மந்திரி சி. சுப்பிரமணியம், நகர தபால் ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"சென்னை சர்க்கார் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் பலவற்றையே இன்னும் சர்க்கார் நிறைவேற்றாதிருக்கின்றனர்; தங்கள் ஊழியர்களின் கோரிக்கைகளுக்குத்தான் மாநில சர்க்கார் முதலிடம் தர வேண்டும்; என்றாலும், சர்க்கார் ஊழியரோ இல்லையோ, மாதம் ரூ. 100-க்குக் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களின் குழந்தைகள் அனைவருக்கும் கிடைக்கும் சலுகை, மத்திய சர்க்கார் ஊழியர் குழந்தைகளுக்கும் கிடைக்கும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சேலம் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

"7—8—56 இரவு 9 மணிக்கு, சேலம் 13-வது வட்டம் கல்லாங்குத்துகிளையில் மேற்படி கூட்டம் நடைபெறும். அது சமயம் சில முக்கிய பொருள் பற்றி ஆராய வேண்டியிருப்பதால் எல்லா உறுப்பினர்களும் தவறாமல் வரக் கோருகிறேன்,"

என்று, நகர தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிறார்.

சர்க்கார் ஊழியர் நம்பிக்கையை முதன் மந்திரி சிதறடிப்பாரா?

சென்னை, ஆக. 3—

ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்னர், தாம், சென்னை முதலமைச்சர் காமராசரைச் சந்தித்ததாகவும், அப்போது அவர், இன்னும் ஒரு மாத காலத்திற்குள் மாநிலத்திலுள்ள சர்க்கார் பதிவில்லாத ஊழியர்களுக்குச் சரியான பரிகாரம் தேடித் தருவதாக உறுதிமொழி கொடுத்திருக்கிறார் என்றும், எனவே, இன்னும் ஓரிரு நாட்களில் சர்க்கார் அறிவிப்பு வெளிவரலாம் என்று தாம் நம்புவதாகவும் சென்னை என். ஜி. ஓ. சங்கத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

தங்களைப் போன்ற நடுத்தர வகுப்பு மக்களும் காலாகாலத்தில் தங்களுக்கென அமைப்புகள் ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் அவர்கள் நசித்து ஒழிக்கப்பட்டு விடுவர் என்றும், இந்த நிலைமை ஏற்படாதிருக்க, மத்திய, மாநில சர்க்கார் ஊழியர்கள் மட்டும் ஒரு பொது அமைப்பில் ஒன்று சேர்ந்துவிட்டால் மட்டுமல்லாமல், அந்த அமைப்புகளில் பலவகைப்பட்ட தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

★★

தி. மு. க. தேர்தல் நிதி துவக்கவிழா

5—8—56 ஞாயிறு காலை 9 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

★

தலைவர் :

தில்லை-வில்லாளன்

பேசுவோர் :

அண்ணா

டி. கே. பொன்னுவேலு

★

நன்கொடை : ரூ. 5, 3, 2, 1.

—தி. மு. க.—மாணவர் கிளை

★★

இருமொழி பம்பாய் மாநிலம் வேண்டுமாம்

நேருவுக்கு 180 மக்கள் சபை உறுப்பினர்கள் கடிதம்

புதுடில்லி, ஆக. 3—

'இரு மொழி பம்பாய் மாநிலம் அமைக்க வேண்டும்' என்று, மாநில புது அமைப்பு மசோதாவிற்கு வந்துள்ள திருத்தத்தைப் பிரதமர் நேரு ஆதரிக்க வேண்டும் என்று சுமார் 180 மக்கள்சபை உறுப்பினர்கள் கோரியிருக்கின்றனராம்.

கம்யூனிஸ்டுகள் நீங்கலாக இதர எல்லாக் கட்சியினரும் அடங்கிய இந்த 180 உறுப்பினர்களும், பிரதமர் நேருவுக்கு எழுத்து மூலம் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளனராம்.

இந்த வேண்டுகோளில்—தேஷ்முக், அசோக் மேத்தா, எஸ். கே. படீல், துளசிதாஸ் கிலாசந்த் முதலிய முக்கியமானவர்களும் கையொப்பமிட்டிருக்கிறார்களாம்.

கையொப்பமிட்டிருப்போரில் 10 பேர்தான் காங்கிரசார் எனவும், குஜராத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேர் மட்டுமே கையெழுத்திட்டிருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது.

காலங்கடந்த இந்தத் தருணத்திலேனும், ஒரு இரு மொழி மாநில அமைப்பிற்கு இணங்குமாறு குஜராத்தி, மராத்தி தலைவர்களை பலர் வற்புறுத்தி வருகின்றனராம்.

இருமொழி பம்பாய் மாநிலம் அமைவது பீகாருடன் இணைய மறுத்துவிட்ட வங்க மாநிலத்தவருக்குப் பிடிக்கவில்லை என்றும், அதனால் அந்தப்பகுதியைச் சேர்ந்த மக்கள் சபைப் பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளில் கையொப்பமிட விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

சென்னை 42-வட்ட தி. மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

5-8-56 மாலை 3 மணிக்கு சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் '4 நமசிவாய முதலிதெரு,' கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

'வள்ளுவர் விழா'

6—8—56 மாலை 5 மணிக்கு, சென்னை—தாம்பரம் கிறித்துவக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் சார்பில், 'வள்ளுவர் விழா', ஆண்டர்சன் மண்டபத்தில் நடைபெறும். பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

24,000 கைத்தறிகள்

கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து விடுமாம்

சென்னை, ஆக. 4—

இவ்வாண்டில், 24,000 கைத்தறிகளை கூட்டுறவு சங்கத்தில் சேர்க்க சென்னை சர்க்கார் இலட்சிய அளவு நிர்ணயித்துள்ளனர்.

துவக்கத்தில் 5,000 தறிகளைக் கூட்டுறவு சங்கத்தில் சேர்க்க சர்க்கார் பணம் வழங்கியுள்ளனர்.

ஜூலை 31-ந்தேதிக்குள் 5,000 தறிகள் கூட்டுறவு சங்கத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. ஒன்றரை இலட்சம் தறிகள்—அதாவது, மொத்தத் தறிகளில் 27 சதவிகிதம் தற்போது கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்துள்ளன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 50 சதவிகிதம் தறிகள் கூட்டுறவு சங்கத்தில் சேர்ந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கருத்துக்களைத் தெரிவிக்க 36-கோடி மக்களும் உரிமையுடையவர்கள்

உண்ணு நோன்பு மேற்கொண்ட மக்கள்சபை உறுப்பினருக்கு தலைவர் தந்த விளக்கம்

புதுடில்லி, ஆக. 3—

மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் பிரச்சினையில் பம்பாய், பீகார் மாநில மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக பீகார் மாநிலத்தைச் சேர்ந்த, சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர் பண்டித மிஸ்ரா என்பார், தாம் 15 நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ள இருப்பதாக இன்று நடைபெற்ற டில்லி மக்கள் சபைக் கூட்டத்தின்போது அறிவித்திருக்கிறார்.

தம்மால் முடிந்த அளவுக்கு மக்கள் சபை கூட்டங்களில் கலந்துகொள்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மக்கள் சபையில், மேற்படி உறுப்பினர் தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்ததும், மக்கள் சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், அவரை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக்கொண்டதாகவும், நாட்டிலுள்ள 36 கோடி மக்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க உரிமையுடையவர்களாக இருப்பதால், இத்தகைய பிரச்சினைகளையெல்லாம், விவகாரத்தில் சம்பந்தப்பட்ட மக்களுடன் கலந்து பேசி முடிவு காண்பதுதான் சரியான வழியென்றும் தாம் கூறினதாகவும், எப்படியிருந்தாலும், அவருடைய விருப்பத்திற்குத் தாம் குறுக்கீடாக இல்லாமல் அவர் முடிவுக்கே விட்டுவிடுவதாகவும் கூறியிருக்கிறார்.

தங்க இடம் தந்ததால் சுட்டு வீழ்த்தினராம்!

பம்பாய், ஆக. 3—

'தேசியவாதிகளுக்குத் தன்னுடைய வீட்டில் தங்க இடம் ஒதுக்கினர்' என்ற குற்றத்திற்காக, பர்டாஸ் தாலுகாவிலுள்ள அசேஹோரா எனும் கிராமத்தைச் சேர்ந்த மாது ஒருவரை போர்ச்சுகீசியப் போலீசார் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர்.

தேசியவாதிகள் மீது அனுதாபம் கொண்டிருந்த அந்த மாதுவின்வீட்டில் எதிர்பாராமல் உள்நுழைந்த போலீசாரை அவர் எதிர்த்துப் போராடினர் என்றும், இறுதியில் அவர் போலீசாரால் சுட்டுவீழ்த்தப்பட்டார் என்றும் தெரிகிறது.

தானே இயங்கும் தறிகளால் தொழிலாளர்கள் வேலை இழக்க மாட்டார்கள்?

மாநில சர்க்கார் மனுக்கள் எந்த நோக்கத்தில் பரிசீலனையாகும்?—மத்திய அமைச்சர் தரும் விளக்கம்

மக்கள்சபையில், துணி ஆலைகளில் நவீன இயந்திரங்களை அமைப்பது சம்பந்தமான கேள்விகளுக்கு வர்த்தக-தொழில் இலாகா அமைச்சர் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நூற்புக் கட்டம்வரை நவீன இயந்திரங்களை அமைப்பதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது. தறிகளைத் தானே இயக்குவதாக (ஆட்கள் இல்லாமல்) அமைத்தால் தான் கட்டுப்பாடு உண்டு; தானே இயங்கும் தறிகளை அமைப்பதால் தொழிலாளர்கள் வேலை இழக்க மாட்டார்கள் என்று மாநில சர்க்கார் திருப்திகரமான முறையில் வாக்குறுதி அளித்தால்தான் அவ்விதத் தறிகளை இறக்குமதி செய்வதற்கான மனுக்களுக்கு சாதகமான பதில் கிடைக்கும்.

"துணி ஆலைகளில் [illegible] துள்ள இயந்திரங்களின் 'தர'த்தை மதிப்பிட [illegible] செய்து வருகிறது; [illegible] மாதங்களில் இந்த [illegible] வேலை முடிந்துவிடும்."

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"அடுத்த பத்து ஆண்டுகளில் நாட்டில், துணிக்கு ஏற்படப் போகும் அதிகப்படியான கிராக்கியைப் பெரும் அளவில் பரவலான உற்பத்திமூலம் சமாளிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கையாகும்."

மத்திய சர்க்காரிடமிருந்து 250 'அம்பர் சர்க்கா'க்கள்

சென்னை மாநில சர்க்காருக்குக் கிடைக்கக் கூடுமாம்

சென்னை, ஆக. 3—

"வருகிற செப்டம்பர் திங்களில் சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து 250 'அம்பர் சர்க்கா'க்கள் கிடைக்கும்,"

என்று [illegible], [illegible] டைரக்டர் ஆர். பார்த்தசாரதி தெரிவித்துள்ளார்.

மாநில சர்க்காரின் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிற்சாலைகளிலேயே 'அம்பர் சர்க்கா'வைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும், அந்தத் தொழிற்சாலைகளின் மூலம் தயாரிக்கப்படும் 'அம்பர் சர்க்கா'க்களுக்கு ஆகும் செலவு ஆகியவை குறித்து டைரக்டர் பரிசீலனை நடத்தி வருகிறார் என்றும், வருகிற அக்டோபர் திங்கள் துவக்கத்திலேயே 'அம்பர் சர்க்கா' விற்பனைக்கான ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதனிடையில் 'சர்க்கா' மூலம் நூல் நூற்கப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க அதிகாரிகளுக்கு உதவி செய்யும் வகையில், அகில இந்திய காதி, கிராமக் கைத்தொழில் குழு சென்னை மாநிலத்திற்கு 250 அம்பர் சர்க்காக்கள் தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அம்பர் சர்க்காக்களை உபயோகிப்பது குறித்து, 30 நூற்புத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி தரும் நோக்கத்துடன் சென்னை நகரில் 5 இடங்களில் பயிற்சிச் சாலைகள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும், அப்பயிற்சி 3 மாத காலத்திற்குத் தரப்படுமெனவும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

மேலும் அவர், வருகிற 1957-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் மாநில முழுமையிலும் 6,000 நூற்புத் தொழிலாளர்கள் பயிற்சியளிக்கப்பட்டிருப்பர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவில் 3600 தொழிலகங்களில் 'பிராவிடண்ட் நிதி' சட்டம் அமுல்?

20-இலட்சம் தொழிலாளர்கள் சட்டத்தின் மூலம் நன்மை பெறுகின்றனராம்

தொழிலாளருக்கான பிராவிடண்டு நிதி சட்டம் மேலும் 14-புதிய தொழில்களுக்கு பரவலாக்கப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் மேலும் நான்கு இலட்சம் தொழிலாளர்கள் நன்மையடைவார்களாம் !

பிராவிடண்ட் நிதிக்கு தொழிலாளர்கள் செலுத்தும் தொகைக்கு சமமான தொகையை நிர்வாகிகள் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும்.

ஏற்கனவே 6 தொழில்களில் 16 இலட்சம் தொழிலாளர்கள் இச்சட்டத்தின் நன்மையைப் பெற்றிருக்கின்றனர்.

புதிய தொழில்களையும் சேர்ந்து, ஆகமொத்தம் இந்தியா முழுவதிலும் 3,600 தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சுமார் 20 இலட்சம் தொழிலாளிகள் இச்சட்டத்தின் நன்மைகளைப் பெறுகின்றனர்.

அணுசக்தியினுல் இயங்கும் வியாபார கப்பல்

அணுவிசையால் இயங்கும் முதலாவது வியாபாரக் கப்பலைக் கட்டுவதற்கு, அமெரிக்கத் தலைவர் ஒப்புதல் தந்துள்ளார்; அக்கப்பலைக் கட்டுவதற்கு 4,25,00,000-டாலர் செலவாகும். (ஒரு டாலர் ஏறக்குறைய ரூ. 4-12-0க்குச் சமமாகும்)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.